செய்தி வெளியீடு எண் : 1453 நாள் : 21.07.2023

**குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில் ஃபேம் டி என் நிறுவனத்தால் சர்வதேச வர்த்தக நிதி சேவைகள் தளம் இன்று (21.07.2023) துவக்கி வைக்கப்பட்டது**

தமிழக அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் கீழ் இயங்கும் "ஃபேம் டி என்" மற்றும் "ரிசிவபிள்ஸ் எக்ஸ்சேன்ஜ் ஆஃப் இந்தியா லிமிடெட்' (ஆர் எக்ஸ் ஐ எல்) இன் துணை நிறுவனமான "ஆர் எக்ஸ் ஐ எல் குளோபல் ஐ எப் எஸ் சி" லிமிடெட் உடன் இணைந்து தமிழ் நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கு தேவையான நிதி தீர்வுகளை வழங்குவதற்காக " சர்வதேச வர்த்தக நிதி சேவைகள் ஐ எப் எஸ் சி" தளம் இன்று (21.07.2023) துவக்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் திருமதி சிஜி தாமஸ் வைத்யன், இ.ஆ.ப., மற்றும் ஆர் எக்ஸ் ஐ எல் குளோபல் நிறுவனத்தின் இயக்குநர் திரு.கேதன் கெய்க்வாட் ஆகியோர் இதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். மேலும் இந்த தளத்தில் நிதி பரிவர்த்தனைகள் விரைவில் தொடங்கப்படும்.

சர்வதேச வர்த்தக பரிவர்த்தனைகளுக்கான, பல்வேறு நிதி வசதிகளை இதன் வாயிலாக பெற முடியும். வர்த்தக வரவுகளை ரொக்க நிதியாக மாற்றுவதற்கும், குறுகிய கால நிதியை பெறுவதற்கும் இந்த சர்வதேச நிதி சேவை தளம் உதவியாக இருக்கும்.

இந்நிகழ்ச்சியில் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் திருமதி சிஜி தாமஸ் வைத்யன், இ.ஆ.ப., கூடுதல் ஆணையர் தொழில் வணிகத்துறை திருமதி கிரேஸ் பச்சாவ், இ.ஆ.ப., மற்றும் ஆர் எக்ஸ் ஐ எல் குளோபல் நிறுவனத்தின் இயக்குநர் திரு.கேதன் கெய்க்வாட்ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in